මුදල්, ක්‍රමසම්පාදන සහ ආර්ථික සංවර්ධන අමාත්‍යාංශය
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
MINISTRY OF FINANCE, PLANNING AND ECONOMIC DEVELOPMENT

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව. | செயலகம், கொழும்பு 01. இலங்கை. | The Secretariat, Colombo 01. Sri Lanka.

කාර්යාලය / அலுவலகம் / Office: 011 - 2484500, 011 - 2484600, 011 - 2484700
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011 - 2449823
වෙබ් අඩවිය / இணையத்தளம் / Website: www.treasury.gov.lk


මගේ අංකය / எனது இல. / My No.: BD/CBP/01/01/02/2026
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2026.06.30

**வரவுசெலவுத்திட்ட சுற்றுநிருப இல. : 02/2026**

அமைச்சுக்களின் செயலாளர்கள்/ மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்
விசேட செலவின அலகுகள் மற்றும் திணைக்களத் தலைவர்கள் / மாவட்டச் செயலாளர்கள்/
அரச கூட்டுத்தாபனங்கள்/ பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு/ நியதிச்சட்ட
சபைகள் என்பவற்றின் தலைவர்கள் அனைவருக்கும்

## வரவுசெலவுத்திட்ட அழைப்பு - 2027

## நடுத்தரக் கால நிதிக் கட்டமைப்பிற்குள் 2027 வருடாந்த வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கான வழிகாட்டுதல்கள்

### 1. அறிமுகம்

2027 ஆம் நிதியாண்டிற்கான செலவின மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கு வழிகாட்டுதல், அரசிறைசார் பிரமானங்கள் மற்றும் செயற்பாட்டு வழிமுறைகளை வழங்குவதற்காக, 2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டத்தின் பிரிவு 22 இன் படி, 2027 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்ட அழைப்புச் சுற்றறிக்கை இதன்மூலம் வெளியிடப்படுகிறது.

அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்ட நிதிசார் செயல்நுணுக்கக் கூற்றில் (Fiscal Strategy Statement) உள்ளடக்கப்பட்டுள்ள, அங்கீகாரமளிக்கப்பட்ட நடுத்தரக்கால அரசிறைக் கட்டமைப்பிற்கு (Medium-Term Fiscal Framework) உட்பட்டு, அரசாங்கத்தின் அரசிறை திரட்சிப்படுத்தல் குறிக்கோல்கள், செலவின முன்னுரிமை மற்றும் அரசாங்க வளங்களின் திறமையான ஒதுக்கீடு ஆகியவற்றை உரிய முறையில் கருத்திற் கொண்டு 2027 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்படும்.

அதன்படி, அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் பிற செலவின முகவராண்மைகள் அனைத்தும், இந்தச் சுற்றறிக்கை மற்றும் பின்வரும் ஆவணங்களுக்கு இணங்கத் தங்களது வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளைத் தயாரித்தல் வேண்டும். இந்த ஆவணங்களைப் பொதுத் திறைசேரியின் இணையதளத்திலிருந்து (www.treasury.gov.lk) பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

- அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டு பாராளுமன்றத்தில் அறிவிக்கப்பட்ட நிதி செயல்நுணுக்கக் கூற்று,
- பொது முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் (Public Investment Programme)
- நடுத்தரக்கால நிதிக் கட்டமைப்பைக் கருத்திற் கொண்டு நிர்ணயிக்கப்பட்ட, 2027 ஆம் ஆண்டுக்கான அமைச்சுக்கள் தொடர்பான கட்டுப்படுத்தும் அடிப்படைச் செலவின உச்சவரம்புகள். (Binding Baseline Expenditure Ceilings) **(பின்னிணைப்பு I)**

### 2. 2027 ஆய் ஆண்டுக்கான செலவின வரையறைகள்

2026.06.11 ஆந் திகதிய BD/CBP/01/01/23/2026 ஆம் இலக்க திறைசேரிக் கடிதத்துக்கு பதிலளிக்கும் விதமாக, செலவின முகவராண்மைகளால் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட "அடிப்படை மதிப்பீடுகளின்" படி மதிப்பிடப்பட்ட, கட்டுப்படுத்தும் செலவின உச்சவரம்புகள் **பின்னிணைப்பு I** இல் கொடுக்கப்பட்டுள்ளன.

பின்னிணைப்பு I இல் குறிப்பிடப்பட்டுள்ள செலவின உச்சவரம்புகள், 2027 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கு கிடைக்கக்கூடிய அதிகபட்ச வள ஒதுக்கீடாக அமையும். அதன்படி, அனைத்து மீண்டெழும் மற்றும் இடைவிடாத செலவின உறுதிமொழிகளும் அங்கீகரிக்கப்பட்ட அடிப்படை உச்சவரம்புகளுக்குள் உள்ளடக்கப்படுவதை அமைச்சுக்கள் உறுதி செய்ய வேண்டும்.

பொது முதலீட்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள புதிய **அபிவிருத்திக் கருத்திட்டம், நிகழ்ச்சித்திட்டம், செயலாற்றுகை, சேவை அல்லது கொள்கை முன்னெடுப்பு** தொடர்பான எந்தவொரு முன்மொழிவும், அடிப்படை வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளிலிருந்து தனியாகச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மேலும், பின்னிணைப்பு I இல் குறிப்பிடப்பட்டுள்ள செலவின உச்சவரம்புகளுக்குள் சேர்க்கப்படக்கூடாது. அத்தகைய முன்மொழிவுகள், தேசிய முன்னுரிமைகள், செயற்படுத்துகை தயார்நிலை மற்றும் 2027 ஆம் ஆண்டு மற்றும் நடுத்தரக் காலத்திற்கான அரசிறை இருப்பு ஆகியவற்றைப் பொறுத்து பரிசீலிக்கப்படும்.

புதிய செலவின முன்னெடுப்புகளுக்கான முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்கும்போது, இந்தச் சுற்றறிக்கையின் பந்தி 3.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டுதல்களை அமைச்சுக்கள் கண்டிப்பாகப் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

## 3. விரிவான வரவு செலவு மதிப்பீடுகளை நிறைவு செய்வதற்கான வழிகாட்டுதல்கள்

### 3.1 வரவுசெலவுத்திட்ட உச்சவரம்புகளின் பிரயோகம்

2027 ஆம் ஆண்டுக்கான விரிவான வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்படும்போது, பின்னிணைப்பு I இல் குறிப்பிடப்பட்டுள்ள செலவின உச்சவரம்புகள் கண்டிப்பாகக் கடைப்பிடிக்கப்படல் வேண்டும். இது தொடர்பாக, பிரதான கணக்கீட்டு அலுவலர்கள் பின்வரும் வழிகாட்டுதல்கள் பின்பற்றப்படுவதை உறுதி செய்தல் வேண்டும்:

i. **அங்கீகரிக்கப்பட்ட வரவுசெலவுத்திட்ட உச்சவரம்பு** கட்டுப்படுத்தும் தன்மை வாய்ந்தது. அது, குறித்த அமைச்சு, அதன் கீழ் வரும் திணைக்களங்கள், செலவின முகவராண்மைகள் மற்றும் சிறப்புச் செலவினப் பிரிவுகளின் தற்போதைய செயற்பாடுகள், நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்திட்டங்கள் மற்றும் சேவைகளுக்கு நிதியளிப்பதற்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.

ii. 2026.06.11 ஆந் திகதிய BD/CBP/01/01/23/2026 ஆம் இலக்க திறைசேரிக் கடிதத்திற்குப் பதிலளிக்கும் வகையில் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட அடிப்படை வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளுக்கிணங்க, ஒவ்வொரு செலவினத் தலைப்பிற்குமான இறுதி வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கு, பொறுப்பு அலுவலர்களுக்குத் தேவையான வழிகாட்டுதலை **பிரதான கணக்கீட்டு அலுவலர்கள்** வழங்க வேண்டும்.

iii. சம்பளம், கூலி, ஓய்வூதியப் பங்களிப்புகள், நிலுவையிலுள்ள செலுத்தப்படாத கட்டணங்கள், வாடகை, வரிகள் மற்றும் தீர்வைகள், மின்சாரம், நீர் மற்றும் தொலைத்தொடர்பு போன்ற பயன்பாட்டுக் கட்டணங்கள் மற்றும் பிற தவிர்க்க முடியாத கடமைகள் உள்ளிட்ட **நியதிச்சட்ட மற்றும் ஒப்பந்தக் கடமைகள் மற்றும் பிற** நிலையான செலவுகளை நிறைவேற்றுவதற்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

iv. வயர்மன்ட் நடவடிக்கைகள், மேலதிக ஒதுக்கீடுகள் மற்றும் பிற நிதியாண்டு வரவு செலவுத்திட்டச் சரிசெய்தல்களின் தேவையைக் குறைக்கும் வகையில், **கட்டாயச் செலவினங்கள் அனைத்திற்கும் போதுமான ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.**

v. நியாயமான காலவரையறைக்குள் உறுதியான பொருளாதார மற்றும் சமூகப் பலன்களை அளிக்கக்கூடியதும், **நிறைவடையும் தருவாயில் உள்ளதுமான தற்போது செயற்படுத்தப்பட்டுவரும் கருத்திட்டங்களுக்கும் செயற்திட்டங்களுக்கும்** முன்னுரிமை அளிக்கப்படும்.

vi. போதிய நிதி ஒதுக்கீடு இல்லாததால் பெறுகைச் செயன்முறைகள், சுங்க அனுமதி மற்றும் செயற்படுத்துகை நடவடிக்கைகளில் ஏற்படும் தாமதங்களைத் தவிர்ப்பதற்காக, அமைச்சுக்கள், துறைமுகங்கள் மற்றும் கருத்திட்டங்களால் செலுத்தப்பட வேண்டிய சுங்கத் தீர்வைகள், வரிகள், அறவீடுகள் மற்றும் பிற

நியதிச்சட்டக் கட்டணங்கள் உள்ளிட்ட **வரி தொடர்பான அனைத்து செல்வினங்களுக்கும் ஏற்பாடு செய்யப்படல் வேண்டும்.**

vii. **பல ஆண்டு கால ஒப்பந்த மற்றும் நிதிப் பொறுப்புகள் கவனமாக மீளாய்வு செய்யப்பட வேண்டும்** என்பதுடன், அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டச் செயற்படுத்துகை அட்டவணைகள் மற்றும் ஒப்பந்த ஏற்பாடுகளுக்கு இணங்க, 2027 ஆம் ஆண்டில் செலுத்த வேண்டிய கடமைகளுக்காகப் போதுமான ஏற்பாடுகள் செய்யப்படல் வேண்டும்.

viii. அமைச்சுக்கள், அங்கீகரிக்கப்பட்ட செலவின உச்சவரம்பிற்குள், செலவின முறைகளை மீளாய்வு செய்து, **வினைதிறன் இலாபங்கள், செலவு சேமிப்புகள்** மற்றும் குறைந்த முன்னுரிமை கொண்ட நடவடிக்கைகளிலிருந்து அதிக முன்னுரிமை கொண்ட திட்டங்களுக்கு **வளங்களை மீள்ஒதுக்கீடு செய்வதற்கான** வாய்ப்புகளைக் கண்டறிய வேண்டும்.

### 3.2 புதிய கருத்திட்டத் தெரிவு முறைமை

i. **புதிய கருத்திட்ட முன்மொழிவுகள் பொது முதலீட்டுத் திட்டத்திலிருந்து (PIP) தேர்ந்தெடுக்கப்படும்.** நடுத்தரக்கால வரவுசெலவுத்திட்டக் கட்டமைப்பில் சேர்ப்பதற்காக, பொது முதலீட்டுத் திட்டத்திலுள்ள கருத்திட்ட முன்மொழிவுகளை அமைச்சுக்கள் கண்டறிந்து முன்னுரிமைப்படுத்த வேண்டும். பொது முதலீட்டுத் திட்டத்தை www.treasury.gov.lk என்ற இணையதளத்தின் மூலம் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

ii. அமைச்சுக்கள், 2027–2029 காலப்பகுதியில் தொடங்கப்படவுள்ள முன்மொழியப்பட்ட புதிய கருத்திட்டங்களின் பட்டியலை, வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளுடன் தனி இணைப் பொன்றாகச் சமர்ப்பிக்க வேண்டும். ஒவ்வொரு கருத்திட்ட முன்மொழிவுடனும், முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட **பின்னிணைப்பு IV - புதிய கருத்திட்ட முன்மொழிவுப் படிவம்** மற்றும் கருத்திட்டத்தின் தயார்நிலையை நிரூபிக்கத் தேவைப்படும் துணை ஆவணங்கள் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். நிர்ணயிக்கப்பட்ட தயார்நிலை அளவுகோல்களைப் பூர்த்தி செய்யும் கருத்திட்டங்கள் மட்டுமே பரிசீலனைக்குச் சமர்ப்பிக்கப்படுவதை உறுதிசெய்யும் பொறுப்பு பிரதான கணக்கீட்டு அலுவலர்களுக்கு உண்டு.

iii. பொருளாதார வளர்ச்சி, ஏற்றுமதி அபிவிருத்தி, டிஜிற்றல் மாற்றம், காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் திறன் மற்றும் மேம்பட்ட பொதுச் சேவை வழங்கல் ஆகியவற்றுக்கு நேரடியாகப் பங்களிக்கும் கருத்திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்குமாறு அமைச்சுக்கள் ஊக்குவிக்கப்படும் அதேவேளை, பணத்திற்கான மதிப்பையும் நீண்டகால அரசிறை நிலைத்தன்மையையும் உறுதி செய்ய வேண்டும்.

iv. 2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க, அமைச்சுக்கள் . மற்றும் திணைக்களங்களால் சமர்ப்பிக்கப்படும் அனைத்து முன்மொழியப்பட்ட கருத்திட்டங்களும், **பொது முதலீட்டுக் குழுவால்**, மூலோபாய முக்கியத்துவம், பொருளாதார மற்றும் சமூகப் பயன்கள், செயற்படுத்தும் தயார்நிலை, கட்டுப்படியாகும் தன்மை, மற்றும் தேசிய அபிவிருத்தி முன்னுரிமைகளுடன் ஒத்திசைவு உள்ளிட்ட அங்கீகரிக்கப்பட்ட திட்டத் தேர்வு அளவுகோல்களின் அடிப்படையில் மதிப்பாய்வு செய்யப்படும் என்பதைக் கவனத்திற் கொள்வது பொருத்தமானதாகும். வருடாந்த வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளில் கருத்திட்டங்களைச் சேர்ப்பது குறித்து, பொது முதலீட்டுக் குழுவின் பரிந்துரைகள், அரசிறைக் கட்டுப்பாடுகள், அரசாங்கக் கொள்கை முன்னுரிமைகள் மற்றும் வளங்களின் இருப்பு ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு முடிவு செய்யப்படும்.

### 3.3 முற்பணக் கணக்குச் செயற்பாடுகள்

i. **அரசாங்க அலுவலர்களின் முற்பணக் கணக்குகள்** தொடர்பான வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகள், இந்தச் சுற்றறிக்கையின் பின்னிணைப்பு III இல் பரிந்துரைக்கப்பட்ட வடிவத்தில் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

ii. சமர்ப்பிக்கப்படும் மதிப்பீடுகள், வழங்கப்படவிருக்கும் முற்பணங்கள், குறித்த வருடத்தில் எதிர்பார்க்கப்படும் அறவீடுகள் மற்றும் நிதியாண்டின் தொடக்கத்திலும் முடிவிலும் கணிக்கப்பட்டுள்ள நிலுவைத் தொகைகள் ஆகியவற்றின் யதார்த்தமான மதிப்பீடுகளின் அடிப்படையில் அமைய வேண்டும்.

iii. **வணிக முற்பணக் கணக்குகளை** தொழிற்படுத்தும் நிறுவனங்கள், எதிர்பார்க்கப்படும் வரவுகள், செலவினங்கள், செயற்பாட்டு முடிவுகள், காசுப் பாய்ச்சல்கள், சொத்துக்கள், பொறுப்புகள் மற்றும் பிற தொடர்புடைய நிதியற் குறிகாட்டிகள் குறித்த போதுமான தகவல்களை வழங்கி, உரிய மதிப்பீடுகளைத் தகுந்த வடிவத்தில் தனித்தனியாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

## 4. அனைத்து செலவின முகவராண்மைகள் தொடர்பான பொது விடயங்கள்

### 4.1 காலநிலை மாற்றத்திற்கான பதிலளிப்பு

வரவுசெலவித்திட்டத்தில் காலநிலை தொடர்பான செலவினங்களை இணைக்கும் பொருட்டு (tagging on climate related expenditure), **பின்னிணைப்பு V** இனைப் பூர்த்தி செய்து, உங்கள் வரவுசெலவுத்திட்ட சமர்ப்பிப்புடன் அதனை முன்வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். செலவினம் எதுவும் ஏற்பட வாய்ப்பில்லை எனில், செலவினமில்லா அறிக்கை சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

### 4.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

செலவினங்களை நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுடன் இணைப்பதற்கு, நிலைபேறான அபிவிருத்தி பேரவையின் இணையதளமான https://sdc.gov.lk இல் இருந்து பதிவிறக்கம் செய்யக்கூடிய வழிகாட்டுதல்களைப் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

### 4.3 வருடாந்த முன்மொழியப்பட்ட பெறுகைத் திட்டங்களைச் சமர்ப்பித்தல்

குறிப்பிட்ட செயற்திட்டங்களைச் செயற்படுத்துவதற்கான நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டிருந்தாலும், தேவையான பெறுகைத் தேவைகள் பெரும்பாலும் நிதியாண்டின் பிற்பகுதி வரை கண்டறியப்படுவதில்லை என்றும் அதன் விளைவாக ஒதுக்கப்பட்ட நிதிகள் முழுமையாகப் பயன்படுத்தப்படுவதில்லை என்றும் அவதானிக்கப்பட்டுள்ளது. எனவே, அனைத்துச் செலவின முகவராண்மைகளும் நிதி ஒதுக்கீடு கோரப்படும் குறிப்பிட்ட செயற்திட்டங்கள், அதன் விளைவுகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பெறுகைத் தேவைகளைத் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும். அதன்படி, அனைத்து செலவின முகவாரண்மைகளும் 2027 ஆம் ஆண்டிற்கான செலவின முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்கும் போது, பெறுகை வழிகாட்டுதல்களின் பிரிவு 4.1.2 மற்றும் பொருட்கள், சேவைகள் மற்றும் ஆலோசனை சேவைய அல்லாத கையேட்டின் அத்தியாயம் 04 இன் பின்னிணைப்பு II ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள நிதியாண்டிற்கான வருடாந்த முன்மொழியப்பட்ட பெறுகைத் திட்டம் மற்றும் தொடர்புடைய துணை ஆவணங்களை தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களத்துக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

### 4.4 பாலினம் மற்றும் சமத்துவத்திற்கான பதிலளிப்பு

அனைத்துச் செலவின முகவராண்மைகளும் பாலினம் மற்றும் சமத்துவம் தொடர்பான தங்கள் பொறுப்புணர்வை உறுதி செய்யுமாறு அறிவுறுத்தப்படுகின்றன. இனப்பெருக்கச் சுகாதார சேவைகளுக்கான நிதி ஒதுக்கீடு, பாலின அடிப்படையிலான வன்முறையைத் தவிர்ப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பெண்களுக்கான ஊக்குவிப்புக்களை இலக்கிடல் ஆகியவற்றில் சிறப்பு கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

## 5. செலவின மதிப்பீடுகளைச் சமர்ப்பித்தல்

இந்தச் சுற்றறிக்கையில் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களுக்கு ஏற்ற வகையில் வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளைத் தயாரிப்பதில், செலவின முகவராண்மைகளின் முதன்மையான கவனம் செலுத்தப்படல் வேண்டும். முறையாகத் தயாரிக்கப்பட்ட

அனைத்து பின்னிணைப்புகளையும் 2026 ஜூலை 31 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ சமர்ப்பிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். செலவின மதிப்பீடுகளுக்கு 2027EXP_ES பதிப்பையும் (version), முற்பணக் கணக்கு மதிப்பீடுகளுக்கு 2027ADV_ES பதிப்பையும் பயன்படுத்தி, ஒருங்கிணைந்த திறைசேரி முகாமைத்துவ தகவல் முறைமை (ITMIS) மூலம் மதிப்பீடுகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். 2027-2029 ஆம் ஆண்டுக்கான நடுத்தரக்கால வரவுசெலவுத்திட்டக் கட்டமைப்பிற்குள், 2027 ஆம் ஆண்டிற்கான வருடாந்த வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளையும், 2028 மற்றும் 2029 ஆம் ஆண்டுகளுக்கான வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளின் கணிப்புகளையும் உள்ளீடுசெய்வது கட்டாயமாகும்.

மேலும், செலவின மதிப்பீடுகள் மற்றும் அனைத்து பின்னிணைப்புகளினதும் அச்சுப் பிரதிகள் மற்றும் மென் பிரதிகளை தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தின் சம்பந்தப்பட்ட பதவிநிலை அலுவலரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். ITMIS இல் தரவுகளை உள்ளீடு செய்யும்போது ஏதேனும் உதவி தேவைப்பட்டின், 011-2484999 என்ற இலக்கத்தினூடாக ITMIS helpdesk அலுவலரைத் தொடர்பு கொள்ளவும்.

**6. வருமான மதிப்பீடுகளைச் சமர்ப்பித்தல்**

2027 ஆம் ஆண்டிற்கான வருமான மதிப்பீடுகளைச் சமர்ப்பிப்பதற்கான வழிகாட்டுதல்களைக் கொண்ட தனியானதொரு சுற்றறிக்கை, அரசிறைக் கொள்கைத் திணைக்களத்தினால் உரிய நேரத்தில், தேவைப்படும்போது வெளியிடப்படும்.

**7. வரவுசெலவுத்திட்ட கலந்துரையாடல்கள்**

செலவின முகவராண்மைகளிடமிருந்து பெறப்பட்ட செலவின மதிப்பீடுகளின்படி, கவலைகள் மற்றும் முன்னுரிமைகளைக் கண்டறிவதற்கும், மதிப்பீடுகளில் ஏதேனும் மாற்றங்களைச் செய்வதற்கும், நிதி அமைச்சர் / திறைசேரிச் செயலாளர் தலைமையில் செலவின முகவராண்மைகளுடன் பொதுத் திறைசேரிக்குச் பொருத்தமான கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்யும். வரவு செலவுத்திட்டக் கலந்துரையாடல்கள் 2026 ஆகஸ்ட் மாதத்தில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளன.

**8. தெளிவுபடுத்தல்கள்**

இதுதொடர்பாக மேலும் ஏதேனும் தெளிவுபடுத்தல் தேவைப்படின், உங்கள் அமைச்சு, திணைக்களம் அல்லது நிறுவனத்தின் விடயத்திற்குப் பொறுப்பான தேசிய வரவுசெலவுத்திட்ட திணைக்களத்தின் தொடர்புடைய பதவிநிலை அலுவலரைத் தொடர்பு கொள்ளவும்.

**ஒப்பம்/- கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும**
**திறைசேரியின் செயலாளர்**

பிரதிகள்:
i. சனாதிபதியின் செயலாளர்
ii. பிரதமரின் செயலாளர்
iii. அமைச்சரவை செயலாளர்
vi. கணக்காய்வாளர் நாயகம்
v. செயலாளர், நிதி ஆணைக்குழு